**தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் : திண்டுக்கல்**

முன்னிலை: திரு.கா.இன்பகார்த்திக், B.A., L.L.M.,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திண்டுக்கல்.

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 31-ம் நாள் வெள்ளிக்கிழமை

சுருக்குமுறை வழக்கு எண்.1066/2026

குற்றமுறையிடுபவர் : தமிழ்நாடு அரசின் பிரதிநிதியாக
உதவி இயக்குநர்,
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,
திண்டுக்கல்.

குற்றம் சாட்டப்படுபவர் பெயர் : திரு.R.ரகுபதி, வயது 71,
த/பெ. ராமச்சந்திரன்
உரிமையாளர் / Occupier
ஸ்ரீகஜேந்திரா பேப்பர் அன்ட் போர்ட்ஸ்
பிரைவேட் லிமிடெட்,
புல எண்.26/1A, பெத்தநாயக்கன்பட்டி
ரோடு, சின்னகளையம்புத்தூர்,
பழனி தாலுகா, திண்டுக்கல்.

இவ்வழக்கானது இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து 31.07.2026-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது புகார்தாரர் தரப்பில் கூடுதல் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.எம்.விஜயேந்திரன் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.அன்பரசன் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**தீர்ப்புரை**

**1. புகாரின் சுருக்கம் :-**

**i.** திண்டுக்கல் மாவட்டம், பழனி தாலுகா, சின்னகளையம்புத்தூர், பெத்தநாயக்கன்பட்டி ரோடு, புல எண்.26/1A என்ற முகவரியில் ஸ்ரீ கஜேந்திரா பேப்பர் அன்ட் போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற தொழிற்சாலை இயங்கி வருகிறது. எதிரி மேற்படி தொழிற்சாலையின் உரிமையாளர் / Occupier ஆவார்.

**ii.** கடந்த 28.12.2023ம் தேதி பகல் 2.20 மணியளவில் மேற்படி தொழிற்சாலையில் Pope reel machine–ல் Paper reel தயார் செய்யும் பணியில் திரு.முருகானந்தம் என்பவர் பணிபுரிந்து கொண்டிருந்தபோது, Pope reel machine–ல் Spool–ன் மீது Paper முழுவதும் சுற்றி முடித்த பிறகு Paper–ஐ கட் செய்து அந்த ரீலை எடுத்துவிட்டு அடுத்த பேப்பர் ரீலை தயாரிப்பதற்காக கட் செய்த பேப்பரை எடுத்து இயந்திரம் இயங்கிக் கொண்டிருந்தபோதே அவர் கையால் மற்றொரு சுற்றும் ஸ்பூலின் மீது வைக்க அனுமதித்தபோது, அவரது இடது கை ஸ்பூலின் மீது பட்டு இடது கையின் மோதிர விரல், நடுவிரல் மற்றும் ஆள்காட்டி விரல் ஆகியவற்றின் நகங்களில் காயம் ஏற்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு விரல் நகங்கள் அகற்றப்பட்டு விரல்களில் நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது.

**iii.** தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92 உடன் இணைந்த பிரிவு 7A(1)(2) மற்றும் பிரிவு 41 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதி 61F–ன் கீழ் தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் உடல் நலனை உறுதி செய்யும் வகையில், தொழிற்சாலையில் பணிசூழல் அமைத்து பராமரித்து மேற்பார்வை செய்திட வேண்டும். தொழிற்சாலையில் யாருக்கும் உடற்காயம் ஏற்படுத்தும் வண்ணம் எந்தவொரு பணிமுறையோ அல்லது வேலையோ செய்யக் கூடாது.

**iv.** ஆனால், மேற்படி தொழிற்சாலையின் உரிமையாளர் / Occupier ஆகிய எதிரி, தொழிலாளர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்யாமல் பணிகளை மேற்கொள்ளச் சொல்லி மேற்படி விதிகளை மீறி எதிரி செயல்பட்டு தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92ன் கீழ் குற்றம் புரிந்துள்ளார். எனவே, திண்டுக்கல் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார உதவி இயக்குநர் அவர்கள் எதிரி மீது இத்தனிப் புகாரை தாக்கல் செய்துள்ளார்.

**2.** மேற்படி புகாரானது இந்நீதின்றத்தில் சுருக்குமுறை வழக்கு எண்.1066/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி ஆஜரரானதும், எதிரி மீதான தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு

92ன் படியான இவ்வழக்கு குற்றங்களின் சராம்சத்தை எதிரிக்கு விளக்கி கூறி வினவிய போது, எதிரி பொய் வழக்கு என்றும், எதிரி தான் குற்றவாளி இல்லை என்று மறுத்து சாட்சிகள் விசாரணை செய்யப்பட வேண்டும் என்று கூறினார்.

3. புகார்தாரர் தரப்பு வழக்கிற்கு ஆதரவாக ஒரு சாட்சி விசாரிக்கப்பட்டு 10 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. புகார்தாரர் தரப்பில் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. புகார்தாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களில் எதிரிக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து எதிரியிடம் u/s. 351(1)(b) BNSS பிரிவின் கீழ் வினவியபோது எதிரி, மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் உண்மைதான் என்றும், குற்றத்தை ஒப்புக் கொள்வதாகவும் கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகளோ, சான்றாவணங்களோ, சான்று பொருட்களோ முன்னிடப்படவில்லை.

5. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும் ?

கற்றறிந்த புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் அ.சா.1ன் சாட்சியத்தில் இருந்தும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்களின் மூலமாகவும், புகார்தாரர் வழக்கு தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எதிரியும் அ.சா.1ன் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்களை ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், எனவே, புகார்தாரர் வழக்கு தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, எதிரியை தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92–ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து தகுந்த தண்டனை வழங்குமாறு வேண்டினார்.

6. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் புகார்தாரர் தாக்கல் செய்துள்ள வழக்கு உண்மைதான் என்றும், எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்வதாகவும், இவ்வழக்கு

குற்றத்தின் தன்மையை கருத்தில் கொண்டு எதிரிக்கு குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு வேண்டினார்.

7. அ.சா.1ன் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றவாணங்கள் ஆகியவற்றை பரிசீலிக்கையில், திண்டுக்கல் மாவட்டம், பழனி தாலுகா, சின்னகளையம்புத்தூர், பெத்தநாயக்கன்பட்டி ரோடு, புல எண்.26/1A என்ற முகவரியில் ஸ்ரீ கஜேந்திரா பேப்பர் அன்ட் போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற தொழிற்சாலை இயங்கி வருகிறது என்பதும், எதிரி மேற்படி தொழிற்சாலையின் உரிமையாளர் என்பதும், கடந்த 28.12.2023ம் தேதி பகல் 2.20 மணியளவில் மேற்படி தொழிற்சாலையில் Pope reel machine–ல் Paper reel தயார் செய்யும் பணியில் திரு.முருகானந்தம் என்பவர் பணிபுரிந்து கொண்டிருந்தபோது, Pope reel machine–ல் Spool–ன் மீது Paper முழுவதும் சுற்றி முடித்த பிறகு Paperஐ கட் செய்து அந்த ரீலை எடுத்துவிட்டு அடுத்த பேப்பர் ரீலை தயாரிப்பதற்காக கட் செய்த பேப்பரை எடுத்து இயந்திரம் இயங்கிக் கொண்டிருந்தபோதே அவர் கையால் மற்றொரு சுற்றும் ஸ்பூலின் மீது வைக்க அனுமதித்தபோது, அவரது இடது கை ஸ்பூலின் மீது பட்டு இடது கையின் மோதிர விரல், நடுவிரல் மற்றும் ஆள்காட்டி விரல் ஆகியவற்றின் நகங்களில் காயம் ஏற்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட விரல் நகங்கள் அகற்றப்பட்ட விரல்களில் நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது என்பதும், மேற்படி தொழிற்சாலையின் உரிமையாளர் / Occupier ஆகிய எதிரி, தொழிலாளர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்யாமல் பணிபுரிய அனுமதித்ததால், தொழிலாளிக்கு காயம் ஏற்பட்டுள்ளது என்பதும், 25.03.2026ம் தேதியன்று பகல் 11.50 மணியளவில் செய்த புலனாய்வின்போது கண்டறியப்பட்டுள்ளது என்பதும் புலனாகிறது. மேலும், புகார்தாரர் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் குறித்து எதிரியிடம் BNSS பிரிவு 351(1)(b)ன் படி கேள்வி எழுப்பியபோது, அ.சா.1ன் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள்

உண்மையென எதிரி ஒப்புக் கொண்டுள்ளார்.

8. அதன்படி, தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92 உடன் இணைந்த பிரிவு 7A(1)(2) மற்றும் பிரிவு 41 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதி 61F–க்கு முரணாக செயல்பட்டும், எதிரி தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92–ன் படி குற்றம்புரிந்துள்ளார் என்பது தெளிவாகிறது.

9. முடிவாக, எதிரி தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 92 உடன் இணைந்த பிரிவு 7A(1)(2) மற்றும் பிரிவு 41 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதி 61F–ன் படி குற்றவாளி என தீர்மானித்து மேற்படி குற்றத்திற்கு **ரூ.20,000/–(ரூபாய் இருபதாயிரம்)** அபராதமும், மேற்படி அபராத தொகையை செலுத்தத் தவறினால் **மூன்று மாதம்** மெய்க்காவல் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

10. எதிரியால் செலுத்தப்படும் மொத்த அபராத தொகை **ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம்)** தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிச் சட்டப்பிரிவு 3(2)(l)–ன் படி தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிக்கு அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது.

11. இந்த வழக்கில் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால், சொத்து குறித்த உத்தரவு எதுவும் இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைகள் நீக்கப்பட்டு, இன்று 2026–ம் வருடம் ஜூலை மாதம் 31–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.07.31 12:36:12 +0530

தலைமை நீதித்துறை நடுவர்
திண்டுக்கல்.

<u>அரசுத் தரப்புச் சாட்சிகள் :–</u>

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.மணிமாறன்(துணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், திண்டுக்கல்). |

<u>அரசுத் தரப்புச் சான்றாவணங்கள்:–</u>

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | ஆய்வறிக்கை படிவம் |
| அ.சா.ஆ.2 | புகைப்படங்கள் |

அ.சா.ஆ.3 வாக்குமூலங்கள்

அ.சா.ஆ.4 ESI Form –12

அ.சா.ஆ.5 உரிமையாளர் /occupier மீதான காரணம் கோரும் அறிவிப்பு

அ.சா.ஆ.6 அஞ்சலக ஒப்புகை அட்டை

அ.சா.ஆ.7 விரிவான புலனாய்வு அறிக்கை

அ.சா.ஆ.8 உரிமையாளரின் பதில் கடிதம்

அ.சா.ஆ.9 மேல்நடவடிக்கை தொடருதல் குறித்த கடிதம் அசல்

அ.சா.ஆ.10 வழக்கு அனுமதி ஆணை

அரசுதரப்பு சான்றுப்பொருட்கள் : – இல்லை.

எதிரி தரப்பு சாட்சி, மற்றும் சான்றாவணம் : இல்லை.

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.07.31 12:36:02 +0530

தலைமை நீதித்துறை நடுவர்
திண்டுக்கல்.

பின் குறிப்பு:–

1. இந்த வழக்கில் எந்த சாட்சியும் மூன்று முறைக்கு மேல் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.
3. வழக்கு முடிவு குறித்து இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.07.31 12:36:25 +0530